மக்கள்! ஆறு

Registered as a Newspaper

நல்லூர் பிரதேச நூலகம்
மாநகர ... 
யாழ்ப்பாணம்

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2024 ஆனி 11 வெள்ளிக்கிழமை (25-06-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 209

# புலிகள் வைத்த தரைக் கண்ணியே 10 படையினரையும் பலி கொண்டது

## நகரை நோக்கி துப்பாக்கி வேட்டு

யாழ்ப்பாணம், ஜூன் 25

மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் நேற்று பிற்பகல் யாழ். நகரக் கடற்கரையோரப் பகுதிகளை நோக்கி இடைக்கிடை துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர். (இ-162)

## பொலீஸார் ஒருவர் சுகவீனம்

விடுதலைப் புலிகளின் பாதுகாப்பில் உள்ள பொலிஸ்காரர்களில் ஒருவர் சுகவீனம் காரணமாக நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்: குணவர்த்தன (26 வயது) என்னும் பொலிஸ்காரரே ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார். (ஒ-15)

## 'கம்உதாவ'வில் ஹேமா இல்லை

கொழும்பு, ஜூன் 25

நேற்று முன்தினம் மிஹிந்தலையில் இடம்பெற்ற 'கம் உதாவ' நிகழ்ச்சியில் திருமதி ஹேமா பிரேமதாசா கலந்து கொள்ளவில்லை.

அவருக்கு அனுப்பப்பட்ட அழைப்பை அவர் நிராகரித்து விட்டார் என்று தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## படையினருடன் மோதல் வீரப்பன் காயம்?

சென்னை, ஜூன் 25

கர்நாடக - தமிழக எல்லைக் காட்டுப் பகுதியில் சந்தன மரக் கடத்தல்காரன் வீரப்பன் கும்பலுக்கும் அதிரடிப் பொலிஸ் படையினருக்கும் இடையே நடந்த மோதலில் வீரப்பன் காயமடைந்த நிலையில் காட்டுக்குள் தப்பி ஓடியிருக்கலாம்.

இவ்வாறு பொலிஸ் துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் விஜயகுமார் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இம் மோதலில் வீரப்பனின் நெருங்கிய சகா ஒருவர் கொல்லப்பட்டார் என்றும் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காட்டுக்குள் தப்பி ஓடிய ஐந்து பேரில் ஒருவன் வீரப்பனாக இருக்கலாம் என்றும் அவர் தெரிவித்தார். (த-எ)

## ஐ. நா செயலாளரை கொல்ல முயற்சி

லண்டன், ஜூன் 25

ஐ. நா. பொதுச் செயலாளர் பூட்றொஸ் காலியைக் கொலை செய்வதற்குச் சதி செய்த குற்றச்சாட்டின் பேரில் முஸ்லிம் அடிப்படைவாதிகள் எண்மர் நியூயோர்க் நகர பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-6)

## மத்ரான புறப்பட்டது

யாழ்ப்பாணம், ஜூன் 25

ஆயிரத்து 700 பரல் மண்ணெண்ணெயுடன் பருத்தித்துறைக்கு வந்த 'மத்ரான' கப்பல் அவற்றை இறக்கி விட்டு நேற்று நண்பகல் பருத்தித்துறையில் இருந்து புறப்பட்டுச் சென்றது. (இ-5)

## அராலித்துறை கண்ணிவெடி குறித்து கொமன்வெல்த் குழு அறிக்கை

கொழும்பு, ஜூன் 25

விடுதலைப் புலிகள் புதைத்து வைத்த தரைக் கண்ணி வெடிக்கே லெப்டினன்ட் ஜெனரல் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன உட்படப் படை அதிகாரிகள் பத்துப்பேர் அராலித் துறையில் பலியாகினர்.

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் எட்டாம் திகதி நடந்த இந்தக் கண்ணி வெடிச் சம்பவத்தில், குண்டு வைக்கப்படுவதற்கு விடுதலைப் புலிகளே பொறுப்பு என்பது ஆணைக்குழுவின் உறுதியான கருத்தாகும்.

கொமன்வெல்த் விசாரணை ஆணைக்குழு நேற்று முன்தினம் ஜனாதிபதி விஜேதுங்காவிடம் சமர்ப்பித்த அறிக்கையில் முன்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அத்தரைக்கண்ணி விடுதலைப் புலிகள் பயன்படுத்தி

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பொருளாதார தடை நீக்கம்: தெற்கில் எதிர்ப்பு வலுக்கிறது

கொழும்பு, ஜூன் 25

வடக்குக்கு விதிக்கப்பட்டிருந்த பொருளாதாரத் தடையை அரசு நீக்கியதுக்குத் தென்னிலங்கையில் எதிர்ப்பு உருவாகிவருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அரசு பொருளாதாரத் தடையை நீக்கியதுக்கு கொழும்பில் சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார் என்றும்—

விடுதலைப் புலிகள் மீண்டும் உத்வேகத்துடன் போரில் இறங்க இது வழிகோலும் என்று அந்த இராணுவ அதிகாரி அச்சம் தெரிவித்தார் என்றும் தாரகிழக்கு ஒலிபரப்புச் சேவையில் நேற்று தெரிவிக்கப்பட்டது.

( 5 ஆம் பக்கம் பார்க்க )

## வடக்குக்கு பெற்றோல், யூரியா; கப்பலில் ஏற்றப்பட்டு வருகின்றன

கொழும்பு, ஜூன் 25

வடபகுதிக்கான பொருளாதாரத் தடை நீக்கப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணத்துக்குகான சில பொருள்கள் கொழும்புத் துறைமுகத்தில் வைத்து கப்பலில் ஏற்றப்பட்டு வருகின்றன.

'மேர்ச் லங்கா' என்ற கப்பலில் பெற்றோல் 100 பரல், டீசல் 100 பரல், மண்ணெண்ணெய் 1,500 பரல், யூரியா 50 மெற்றிக் தொன்னும் ஏற்றப்பட்டுள்ளது.

இந்தக் கப்பல் நேற்று பருத்தித்துறை நோக்கிப் புறப்பட்டு விட்டதாக "ரூபவாஹினி" செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இந்தப் பொருள்களைப் பொறுப்பேற்றுக் கொள்வார் என்றும் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ஒ-6)

## சைக்கிள், மருந்து எடுத்துவர தனியாருக்கும் அனுமதி

யாழ்ப்பாணம், ஜூன் 25

தனியார் வர்த்தகர்கள் தமக்குத் தேவையான சைக்கிள்களை யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவரவும்—

தனியார் வைத்தியசாலைகள் மற்றும் பார்மஸிகள் தமக்குத் தேவையான மருந்து வகைகளை வவுனியா மார்க்கமாகவும் கப்பல் மூலமாகவும் இங்கு எடுத்து வரவும் அனுமதிக்கப்பட்டுள்ளது.

இத்தகவலை யாழ் அரச அதிபர் திரு. கே. மாணிக்கவாசகர் கொழும்பில் இருந்து இங்கு அறிவித்துள்ளார்.

டீசல், மண்ணெண்ணெய் போன்ற பொருள்களை ஏற்றிக்கொண்டு இரண்டொரு தினங்களில் கப்பல் ஒன்று கொழும்பில் இருந்து புறப்படவுள்ளதாகவும்—

100 பரல் என்ஜின் ஒயில், 500 லீற்றர் பிறேக் ஒயில், 200 பரல் தேங்காய் எண்ணெய் 500 பரல் டீசல், ஆயிரத்தி 500 பரல் மண்ணெண்ணெய் என்பன அந்தக் கப்பலில் எடுத்துவரப்பட விருப்பதாக

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## பொருள்களின் விலை திடீர் வீழ்ச்சி

யாழ்ப்பாணம், ஜூன் 25

எரிபொருள் உட்பட வடக்கே எடுத்துச்செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்த பொருள்கள் சிலவற்றின் தடை நீக்கப்பட்டிருப்பதை அடுத்து குடாநாட்டு சந்தைகளில் பொருள்களின் விலைகளில் திடீர் வீழ்ச்சி ஏற்படத் தொடங்கியுள்ளது.

எரிபொருள்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள், தீப்பெட்டி போன்றவற்றின் விலைகளிலும் மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகளிலும் கடந்த இரண்டு தினங்களில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் நேற்று யாழ். நகரப் பகுதிகளில் 90 ரூபாவாக விற்கப்பட்டது. சீனி கிலோ 40 ரூபாவாகவும் சைக்கிள் ரயர்-ரியூப் சோடி 260 ரூபாவாகவும் விற்கப்பட்டன.

அதே போல் மரக்கறி எண்ணெய், தேங்காய் எண்ணெய் ஆகியவையும் முன்னைய விலைகளிலும் குறைவாகவே விற்கப்பட்டன. (இ-5)

## ஐ. தே. கட்சிக்குள் முரண்பாடு; 'கம்உதாவ' நிகழ்வில் வெளியானது

கொழும்பு, ஜூன் 25

ஆளும் ஐ. தே. கட்சிக்குள் முரண்பாடுகள் நிலவிவருகின்றன. மறைந்த ஜனாதிபதி பிரேமதாசவுக்கு ஆதரவாக ஒரு கோஷ்டி கட்சிக்குள் இயங்கி வருகிறது. அதேசமயம் பிரேமதாச [illegible] ரான கோஷ்டி பல[illegible]தாக செயற்பட்டு வருகிறது.

—இவ்வாறு அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவ்வாறான முரண்பாடு நேற்று முன்தினம் மிஹிந்தலையில் நடைபெற்ற 'கம் உதாவ' நிகழ்ச்சியில் வெளிப்படையாகத் தெரியவந்தது. [illegible] பிரேமா[illegible]வின் விசுவாசியான அமைச்சர் சிறிசேன கூரே அங்கு கூட்டத்தில் உரையாற்றுகையில், 'கம்உதாவ' கொண்டாட்டங்கள் நிறுத்தப்படுவது குறித்து தமது கடும் ஆட்சேபனையை வெளியிட்டார்.

ஜனாதிபதி விஜேதுங்காவின் கருத்துக்கு முரணானதாக [illegible] கருத்து அமைந்திருந்தது. கட்சிக்குள் பலப்போட்டி நிலவுவதையும் அது வெளிக்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## கரும்புலிகள் தினம்

யாழ்ப்பாணம், ஜூன் 25

ஜூலை 5 கரும்புலிகள் தினம் ஆகும். இதனை ஒட்டிய பிரசார நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன: சுலோகங்களும், போஸ்டர்களும் நகரின் பல இடங்களிலும் நேற்றுக் காணப்பட்டன. [இ-17]

## போராளிகளை வெளியேற்றி விட்டாராம்

சென்னை, ஜூன் 25

விடுதலைப் புலிகள் உட்பட அனைத்து இலங்கைப் போராளிக் குழுக்களையும் தமது அரசு தமிழகத்தில் இருந்து வெளியேற்றி விட்டதாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

நேற்றுக் காலை சென்னையில் மாவட்ட கலெக்டர்கள் மற்றும் காவல் துறைத் தலைவர்கள் மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். (இ-க-162)

## பெற்றோல் நிலையங்களை இயக்க முயற்சி

யாழ்ப்பாணம், ஜூன், 25

எரிபொருள்களை வடக்கே எடுத்து வருவதற்கான தடை நீக்கப்பட்டிருப்பதை அடுத்து குடாநாட்டில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்கள் சிலவற்றை இயக்கும் முயற்சியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன வடபிராந்திய நிலையம் ஈடுபட்டுள்ளது. (ஒ-5)

## பங்களாதேஷ் நாட்டவர்கள் நாடுகடத்தல்

கொழும்பில் சற்றுவா விடுதிகள் அமைந்துள்ள வட மேற்குக் கரையோரப் பகுதிகளில் இருந்து 83 பங்களதேஷ் நாட்டவர்கள் (ஆண்கள்) பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இங்குள்ள பிளாஸ்ரிக் தொழிற்சாலைகளில் சட்ட விரோதமாக வேலை செய்து வந்த இவர்கள் விரைவில் நாடுகடத்தப்பட உள்ளனர் என்றும்—

உல்லாசப் பயணிகளாக இவர்கள் தீர்நடத்தையில் ஈடுபடுத்தப்பட்டு வந்தனர் என்றும் குடிவரவு, குடியகல்வு திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-6)

## வைத்தியசாலை குழு கொழும்பு செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு பிரிட்டிஷ் அரசாங்கம் அன்பளிப்பு செய்த 15 கோடி ரூபா பெறுமதியான வைத்திய உபகரணங்களை கொழும்பில் இருந்து இங்கு எடுத்து வருவதற்கு யாழ். போதனா வைத்தியசாலையின் அதிகாரிகள் குழு ஒன்று விரைவில் கொழும்பு செல்லவுள்ளது.

இந்த மருத்துவ உபகரணங்களை காலம் தாழ்த்தாது யாழ்ப்பாணம் கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் கொழும்பில் நடைபெற்று வருவதாக வைத்தியசாலை பணிப்பாளர் தெரிவித்தார். (இ-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாடசாலையாக
## சாவகச்சேரி இந்துக்கல்லூரி
### ★ தரமுயரும் நன்னாள் வாழ்த்து மலர் ★

# தென்மராட்சியில் கல்விவல்லாரை உருவாக்கும் உத்தம பணியில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி

இன்பம் கனியும் நாட்டை. போக பூமியை உண்டாக்க வேண்டுமென்றால் கல்வி என்ற விதையை விதைக்க வேண்டும். அது முளைக்கும்; வளரும். வளர்ந்து கேள்வி என்ற இலைகளை நாலு திசையிலும் பரப்பும். அந்தக் கிளைகளில் நல்ல முயற்சி என்னும் தளிர்கள் தளிர்க்கும். அன்பு என்னும் மொட்டுக்கள் அரும்பும். அன்பாய் அரும்பிய மொட்டு அறமாய் மலரும். அறமவர் போகக் கனியை இன்பப் பழத்தைக் கொடுக்கும்.

ஒரு நாடு செம்மையடைய, பண்பாட்டை அடைவதற்கு அடிப்படை கல்விதான் என்ற கருத்தை நிலை பெறச்செய்ய எழுந்ததே சாவகச்சேரி இந்துக்கல்லூரி.

புகழ் பூத்த இக்கலைக் கோயில் தமிழனது அழியாத சொத்தாகிய கல்வியை அமுத சுரபிபோல் வாரி வழங்குகிறது. அக்கொடைப்பணியைச்செய்து "யாதும்ஊரே யாவருங்கேளிர்" என்ற பூங்குன்றனார் கூற்றுக்கு இலக்காக தேசியக் கல்லூரியாக மிளிர்வது கண்டு பெருமையடைகிறேன்.

தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும் என வள்ளுவம் சொல்லும். அந்த வகைக்கு திருவாளர்கள் சோமசுந்தரம், சிவானந்தன், முருகையன், கமலநாதன் போன்றோரையும் என்னையுள்ளிட்டு வளர்த்து, ஈன்ற பொழிதிற் பெரிதுவக்கும் தாயாக மிளிர்கின்றாள் இந்துக் கல்லூரி அன்னை

"உறுதி உறுதி உறுதி
உறுதிக்கேயோர் குலைவுண்டாயின்
இறுதி இறுதி இறுதி"

என்ற பாரதியின் வாக்கினை நெஞ்சத்திருத்தி உறுதியின் உறைவிடங்களாக விளங்கும் தமிழ்ச் செல்வன் போன்ற வீரஞ்செறி பேரானர்களை பெற்றெடுத்தவளும் அவளே

**தென்மராட்சியில்**

வடமராட்சியில் ஒரு ஹாட்லிக் கல்லூரி தன் மண்ணின் மைந்தர்களை உள்வாங்கி அரவணைப்பது போல் தென்மராட்சி மண்ணின் தீரர்களை நல்லவர்களாக, வல்லவர்களாக்க உள்வாங்கும் உத்தமப் பணியைச் செய்யும் கீர்த்தியோடு விளங்கும் புனிதக் கோயில் தமிழ் மண்ணின் அணையா விளக்கென்பேன். யான் கற்றுத்தேறிய கவின் கலைக்கூடம் தேசிய அந்தஸ்தைப்பெற்று தேசொடு விளங்குவது கண்டு நெஞ்சம் தழைக்கின்றேன்.

இந்துவின் நித்திலம் எங்கள் ஈழ மணித்திரு நாடு அதன் சிரமென மிளிரும் யாழ் நகர் இசை மலிந்த புண்ணிய பூமி அதனை அடுத்த தென்மராட்சி முக்கனியின் முதற் கனியும், அடுத்த நற்கனியும் தொடுத்து ஈனும் திவ்விய பதியாம். இப்பதியில் கற்றவர் மலிந்து கருமமாற்றும் பெற்றி போற்றுதற்குரியதே.

**கல்விச் சோலை**

கேடில் விழுச்செல்கம் கல்வி என்பதை நாடி நாளும் கல்விச் செல்வத்தை தேடி உழைக்கும் நல்லவர், வல்லவர் கூடி எழுப்பிய கல்விச் சோலை இந்துக் கல்லூரி என்பேன். கல்விப் புலத்தில் பட்டுப் பச்சை மரகதமென செழித்து வளரும் என் கல்வித்தாய் மண்ணின் நல்ல வண்ணம் வாழும் வீரர்களையும் தீரர்களையும் மண்ணுக்கு உவந்தளித்துள்ளாள். அவள் கொலு வீற்றிருக்கும் நல்ல மண்ணின் இனிய கனியின் சுவை மிதமெனப்பட்டால் தெவிட்டும். ஆயின் இவள் தரும் கல்வித்தேன் பேரானந்தமாய் பெருஞ்சுகம் தருமன்றோ.?

"தொட்டனைத் தூறும்
மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத் தூறும் அறிவு"

என்பதற்கமைய கற்றுணர்ந்த சான்றோரை ஒளிசால உவந்தளிக்கும், உம்பர் உலகென மண்சிறக்க மாட்சிமை தரும் சாவகச்சேரிஇந்து ஆளுமை மிக்க அதிபர்களின் அரவணைப்பால் தியாகச் செம்மல்களின் விடா முயற்சியால்

"ஊழையும் உப்பக்கம்
காண்பர் உலைவின்றி
தாழாது உஞற்றுபவர்"

என்ற வாய்மொழிக்கொப்ப எழிற்கோலங் காட்டும் என் அன்னையே கல்விப்புலத்தின் சீரிய பணியை உவந்தளித்த சிரேட்ட புதல்வன் ஆக்கினாயே அதற்காக என் இதயமார்ந்த நன்றி.

நாடு நலம் பெற வாழ்வு வளம்பெற
தேடு கல்வியைத் தேசொடு தான் தரும்
பீடு நன்மலி பேசருந் தாயவள்

நாடு நாளும் நல்லவராகவே என்று எவ் உதடுகள் நாளும் சொல்லும். என் போன்ற பாசச் சேய்களையும், பக்குவம் மிக்க சான்றோர்களையும் எங்கள் மணித்திருநாட்டிற்கு அணிகலனாக அள்ளித் தருக யாண்டும். உனது சீலமும் தேசும் குன்றாதொளிர்க! குறைவிலாதென்றும் நிறையினை நாடுக! நலமே புரிக!

★

**இ. சுந்தரலிங்கம்**
*வடமாநில கல்விப் பணிப்பாளர்*

---

தேசிய கல்லூரியாக தரமுயர்த்தப்பட்ட சாவகச்சேரி இந்துக்கல்லூரி கல்விப் பணியில் தொடர்ந்தும் வெற்றி நடைபோட்டு கல்வி கனி நல்க எமது நல்லாசிகள்

## வாழ்க இந்துக்கல்லூரி வளர்க அதன் பணிகள்

**சாவகச்சேரி இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**சாவகச்சேரி லியோ கழகங்கள்**

C/5403

---

## பொது ஆட்சி இயல்

பல்கலைக்கழக. இரண்டாம் வருட அரசறிவியல் மாணவர்களுக்கு பயன்படக்கூடிய பொது ஆட்சி இயல் வெளியிடப்பட்டுள்ளது.

விலை ரூபா 80. 00

ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(26237)

---




★ **தரமான சுண்ணாம்பு வகைகள்**
வெள்ளை அடிப்பதற்கு
கட்டட, பூச்சு வேலைக்கு
தளம் அமைக்கும் வேலைக்கு
(கிணறு, மலசலகூடம், குடியிருப்பு நீர்த்தொட்டி நிர்மாண வேலைகளுக்கு உபயோகிக்க முடியும்)

★ **மணல்**
உங்களுக்கு தேவையான
அளவு பெற்றுக் கொள்ளலாம்.

## சுண்ணாம்பு விற்பனை நிலையம்
(உட்கட்டுமானம், த. பொ. மே. கழகம்)
குளப்பிட்டி சந்தி,
காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

(சி-5300)

---

## நாளை

வளவை வளவன் எழுதிய "உண்மைகள்" நூல் வெளியீட்டுவிழா நாளை மாலை 3.30 மணிக்கு யாழ் வேம்படி மகளிர் கல்லூரியில் செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெறும்.

இவ்விழாவில் கலைபண்பாட்டுச்சழகப் பெறுப்பாளர் புதுவை இரத்தினதுரை, குழந்தை ம.சண்முகலிங்கம். பேராசிரியர் கா.சிவத்தம்பி ஆகியோர் உரை நிகழ்த்துவார்கள். [க-15]

o o o

சுண்டுக்குளி சனசமூக நிலையத்தில் நாளை மாலை 4 மணிக்கு யாழ். சுகாதாரத் திணைக்களத்தால் ஒழுங்கு செய்யப்பட்ட சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று நடைபெறும். (க-30)

o o o

இணுவில் மத்திய கல்லூரி ஸ்தாபகர்தின விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 3 30 மணியளவில் மேற்படி கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

இணுவில் மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்கத்தினரால் நடத்தப்படும் மேற்படி விழாவில் துர்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.

o o o

மானிப்பாய் சச்சி இடம்பெயர்ந்தோர் முகாமில் நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் யாழ்மாவட்ட தொழுநோய்க் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் திரு. மு.குணரட்ணம் தலைமையில் தொழுநோய்க்கான ஆய்வு நடத்தப்படும் (இ-162)

## மாணவருக்கு வெல்லம்

நீர்வேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் ஜனவரி, பெப்ரவரி, மார்ச் மாதங்களுக்குரிய மாணவர் உணவு முத்திரைகளுக்கு நாட்டரிசி, உழுந்து. வெல்லம் ஆகிய பொருள்களை விநியோகித்து வருகின்றனர்.

[illegible] உணவு அட்டைக்கு 2 கிலோ [illegible]யும், [illegible] கிலோ [illegible] பருப்பும் விநியோகிக்கப்படுகின்றன. (அ)

---

## திருமறை கலா மன்றத்தின் இலக்கிய விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 25

திருமறைக் கலாமன்றம் நடத்தும் மூன்று நாள் இலக்கிய விழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகிறது.

கலாமன்ற அரங்கில் தினமும் விழா நிகழ்ச்சிகள் பிற்பகல் 5-30 மணிக்கு ஆரம்பமாகும்.

இன்றைய முதல்நாள் விழா பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடக்கும். யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. எஸ். சிவலிங்கராசா, கம்பன் கழக அமைப்பாளர் திரு இ. ஜெயராஜ் கவியும் காவியமும் நிகழ்ச்சியில் கலந்து கொள்வர். "ஔவையார்" இலக்கிய நாடகமும் இடம்பெறும்.

இரண்டாம் நாள் (சனிக்
( 6 ஆம் பக்கம் பார்க்க)

---

## ஆயுள்வேத D. A. M. இறுதிப் பரீட்சை

கொழும்பில் ஆயுள்வேத திணைக்களத்தினால் நடத்தப்படும் D A.M. பரீட்சை ஆடி 16,17,18 ஆம் திகதிகளில் எழுத்துப் பரீட்சையும், மிகுதி நாட்களில் வாய்முறைப் பரீட்சையும் நடைபெறும்.

மேற்படி பரீட்சை யாழ்ப்பாணத்தில் 1993 ஆம் ஆண்டு முடியும் வரை நடைபெறமாட்டாது ஆகவே 28-06 1993 அன்று காலை 10 மணிக்கு கல்லூரியில் பரீட்சை எடுக்கும் சகல மாணவரையும் சமுகமளிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

Dr N. வாமதேவன்
அதிபர்

லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(26236)

---

வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ, சங்கம்,
நீர்வேலி

## இரண்டு சில்லு இயந்திரம் (லாண்ட்மாஸ்ரர்) பெட்டியுடன்

டி சங்கத்தால் நடத்தப்படும் அரிசி ஆலையின் தேவைக்கு நல்ல நிலையிலுள்ள ஓர் இரண்டு சில்லு உழவு இயந்திரம் (லாண்ட்மாஸ்ரர்) பெட்டியுடன் தேவைப்படுகின்றது.

குறித்த உழவு இயந்திரத்தை விற்கவிரும்பும் அதன் சொந்தக்காரர், அவ்வியந்திரத்தின் இனம். குதிரைச் சக்தி எவ்வளவு, எந்த நாட்டின் தயாரிப்பு போன்ற விவரங்களுடன், தங்கள் குறித்த இயந்திரத்தை விற்கவுள்ள விலைவிவரத்தையும் குறித்து 03. 07. 93 ஆம் திகதிக்கு முன் "பொது முகாமையாளர், வலி-கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம். நீர்வேலி" என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

நீர்வேலி,
1993. 06. 21.

பொது முகாமையாளர்

5332

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... மாநகர ... யாழ்ப்பாணம்

# வேம்படி மகளிர் கல்லூரி
# அதிபர் செல்வி இ. இராசரத்தினம்
# நற்சேவை நயப்பிதழ் 25–06–1993

## இவர்கள் பாராட்டி வாழ்த்துகிறார்கள்

### வடமாநிலக் கல்விப் பணிப்பாளர்

"நூற்றிரண்டு மலைகளைச் சாடுவோம்
நுண்ணிடைப் பெண்ணொருத்தி பணியிலே"
என்பது பாரதியின் இதய தாகம்.

இன்று யதார்த்தமாக, பல்துறை விற்பன்னர்களாக பெண்கள் விளங்குவதைக் காணலாம்.

கேடில் விழுச் செல்வம் கல்வி என்பதை நாடி நாளும் கல்விச் செல்வத்தைத் தேடி உழைக்கும் நல்லவர், வல்லவர் கூடியெழுப்பிய கலைக் கோயில் வேம்படி மகளிர் கல்லூரி.

ஆளுமைச் செறிவுடைய அதிபர்கள் வரிசையில் அன்பும், அருளும், பண்பும், பணிவும், புனிதப் பொலிவும் மிளிரும் செல்வி இராசரத்தினம் நினைவில் நிறுத்தப்பட வேண்டியவர். அவர் பாரம்பரியம் மிக்க பாங்கான கல்விக் கூடத்தை பக்குவமாக வளர்த்துச் செல்ல தன்னாலான சகல ஆக்கங்களையும் ஊக்கமுடன் புரிந்த உத்தமி எனலாம். மண்ணில் நல்ல வண்ணம் வாழக் கல்விச் செல்வம் இன்றியமையாதது என்பதை எண்ணித் துணிந்து செயற்பட்ட அதிபராவர்.

ஆளுமை மிக்க ஆசிரியர்கள், வாரி வழங்கும் பெற்றோர்கள், நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் போன்றோரை இயையுற இயக்கிய இரத்தினேஸ்வரி அம்மையாரை கல்வி உலகு என்றும் போற்றும்.

— இரா. சுந்தரலிங்கம்.

### யாழ். கோட்டக் கல்விப் பணிப்பாளர்

பெரியதொரு பாரம்பரியத்தில் கட்டொழுக்கத்தோடு கவினுற மிளிரும் மங்கைவேம்படியாள்; புகழ்பூத்த பொலிவுறு கல்விசால் நங்கை. காலத்தின் கொடுமையால் கவினிழந்து அல்லற்பட்ட வேளையில் துணிச்சலோடு அதிபர் பணி புரிந்த செல்வி இராசரத்தினத்தை தமிழ் மண்ணின் கல்விச் சமூகம் என்றும் மறவாது.

செல்வி இராசரத்தினத்தை ஆசிரியராகச் சேவிப்பப் டிருக்கிறேன்: அதிபராகப் பார்த்திருக்கிறேன். ஆக்கபூர்வமான செயற்றிறனோடும் அடக்கமான பண்பினோடும் உலவும் உத்தமி எனலாம். அவர்தம் பேருக்கமும், தூயபணியும் வேம்படியாளைத் துலங்க வைத்ததென்பேன்.

எண்ணித் துணியும் தளரா உள்ளமும், பெண்மைப் பொலிவும், பேராற்றல் செறிவும் வேம்படியாளை புகழ்க் கொடி ஏந்த வைத்தன. மாணவச் செல்வங்களைக் கண்ணென மதித்து காரியமாற்றிய கர்ம வீராங்கனை.

இவரது ஆட்சிக் காலத்தில் கல்லூரி கண்ட எழுச்சி மிகு அறுவடைகள் போற்றுதற்குரியதே. மாணவிகள் கல்விப் பெறுபேற்றுக்கப்பால் புறச்செயற்பாடுகளில் பொலிவுற்ற தகவினை ஈண்டு நினைவு கூரலாம். குறிப்பாக உடற்பயிற்சிப் போட்டிகளில் ஈட்டிய இமாலய சாதனை எவராலும் சிந்தித்துக்கூடப்பார்க்க முடியாததொன்றே. இத்தகைய பெருமிதப் பேறுகளோடும், தூயசிந்தையோடும் தொண்டாற்றிய அம்மையார் மாணவிகளால் என்றும் மறக்கமுடியாதவரே.

மானிப்பாய் தந்த மங்காப் புகழ்பூத்த நங்கை மண்ணில் நல்ல வண்ணம் இனிதுற வாழ என் இதயமார்ந்த வாழ்த்துக்கள்.

கோ. சி வேலாயுதம்

### பாடசாலை அபிவிருத்திச் சபை

முன்னுதாரணமான கல்விக் கூடமான வேம்படி மகளிர் கல்லூரியின் வளர்ச்சி அங்கு கடமையாற்றிய அதிபர்களதும், ஆசிரியர்களதும் தன்னலமற்ற சேவையாலும் மாணவர்களின் சாதனைகளாலும் ஏற்பட்டதொன்றாகும்.

இந்த மரபில் வந்த இளைப்பாறும் அதிபர் இ. இராசரத்தினம் கல்லூரி மிகவும் நலிவுற்றிருந்த நிலையிலே தம் பதவியை ஏற்றார். அது வான்படையின் வண்ணக் கோலங்களின் காட்சியாக வேம்படி மாறி அங்கு கால் வைக்கவே பலர் பயந்த காலம்.

செல்வி இராசரத்தினம் மனம் தளராது சவாலை ஏற்றார். பெண்மையின் பலம் அங்கு தொனித்தது.

வேம்படியின் வரலாற்றில் இவரின் காலம் குறுகியதானாலும் இக்காலத்தில் பல திருப்புமுனைகள் ஏற்பட்டன எனத் தெளிவாகக் கூறலாம்.

அவருடைய காலம் திட்டங்கள் பல நிறைவேற்றி சாதனைகள் பல புரிந்த காலமாகும்.

திருமதி இராசரத்தினத்தின் ஒய்வு நாட்கள் கல்வித் துறையின் ஆய்வாக இருப்பின் நன்று— அவருக்கு எனது வாழ்த்துகளும் நன்றிகளும்.

She never failed us; Let us not fail her

சுந்தரம் டிவகலாலா.
செயலர்.

### பழைய மாணவர் சங்கம்

ஒன்றரை நூற்றாண்டு கால வரலாற்றுப் பெருமை மிக்க, எமது வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபர்கள் வரிசையில் கால் நூற்றாண்டு காலத்திற்கு மேல் ஆசிரியையாகவும், அதிபராகவும் கடமையாற்றி இளைப்பாறும் செல்வி இரத்தினேஸ்வரி இராசரத்தினம் அவர்களுக்குப் பிரியாவிடை அளித்துக் கௌரவிப்பதில் எமது பழைய மாணவர் சங்கத்தின் சார்பில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

வடபகுதியில் எமது பெண்களுக்கான இந்த ஒரேயொரு தேசியக் கல்லூரியின் வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும் இன்றைய சிக்கலான காலகட்டத்தில் அவருடைய நேர்மையான நிர்வாகத்திறன் பெரிதும் உதவியுள்ளது.

கல்லூரியின் முன்னேற்றத்தைக் கருத்திற் கொண்டு, எமது பழைய மாணவர் சங்கத்தின் யாப்பில் முக்கிய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உறுதுணையாகவிருந்து, சங்கத்தை மறுமலர்ச்சியடையச் செய்வதிலும் அவர் பெரிதும் உதவினார்.

அவரது சேவையை நன்றி உணர்வோடு போற்றுவதோடு, அவர் உள, உடல் ஆரோக்கியத்தோடு வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி க. துரைராஜா, தலைவர்,
(பிரதான முகாமையாளர், இலங்கை வங்கி)

## அறிவாற்றலும் அனுபவமும் உள்ள
## ஆளுமை மிகுந்த அதிபர் திலகம்

கல்விப் பணிக்கே தம்மை ஆளாக்கியிருந்த செல்வி இ. இராசரத்தினம் அவர்கள் ஒய்வு பெறுவதனால் எமது சமுதாயம் ஆற்றலும், அனுபவமும் மிக்க கல்வியாளரான அதிபர் ஒருவரின் சேவையை இழக்கிறது.

அறிவு, ஒழுக்கம், அடக்கம் கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய அவரின் சிறந்த குணங்கள் அவர் ஆற்றிய நற்பணிக்கு துணைபுரிகின்றன. அத்தகைய ஒருவருக்கு எமது பிரதேசத்தில் பெண்களுக்கான உயர் கல்லூரி ஒன்றினை வழிநடத்தக் கிடைத்த வாய்ப்பு கல்லூரியும் சமுதாயமும் பெற்ற பெரும் பேறாகும்

எங்கள் அதிபருக்கு கல்லூரியே குடும்பம். குடும்பமே கல்லூரி. தமது முழுப்பொழுதையும், உழைப்பையும் கல்லூரிக்கு ஈந்து இன்புற்றார். கால் நூற்றாண்டுக்கு மேலாக இக் கல்லூரியின் ஆசிரியராய், பதில் அதிபராய், அதிபராய் பணிபல புரிந்தார்.

விஞ்ஞானப் பட்டதாரியான இவரின் கல்லூரிப் பேச்சுகளில் விவேகானந்தரின் சிந்தனைகளும், வள்ளுவரின் வாய்மையும் ஒலிக்கும் அஞ்சாத மனவுறுதியுடன் கூடிய, இவரின் ஒழுக்கத்தை, கண்ணியத்தை அவதானிப்போர் இவரின் பெற்றோரின் பண்பாட்டுடன் கூடிய வழிநடத்தலை நினையாதிருக்க முடியாது.

**ஆளுமை மிக்கவர்**

ஆங்கிலத்திலும், தமிழிலும் நிறைந்த புலமை பெற்றிருந்தஇவரின் பேச்சுவன்மை, எழுத்தாற்றல் என்பன இவரின் ஆளுமையை அணிசெய்கின்றன. இத்தகைய ஆளுமையுடன் கூடிய அதிபரின் சேவை இன்னும் ஒரு தசாப்தம் நீடிக்காதா எனக் கல்லூரி ஆவலுறுகிறது. இவருடைய மொழித்திறன் தொடர்ந்தும் சமூகத்திற்கு பயன்பட வேண்டும் என விரும்புகிறோம்.

எந்த விடயத்திலும் அதிபர் தமது தூய்மையைப் பேணத் தவறியதில்லை தூய்மையும், நேர்மையும் அவரின் நிர்வாகத்தில் போட்டி போடுவன. இதனாலன்றோ இக்கல்லூரியின் முன்னாள் அதிபர், ஆசிரியர் குழாம், பெற்றோர், கல்விச் சமூகம் ஆகிய அனைவரும் இவரை ஒரு மனத்தோடு கல்லூரியின் அதிபராக வரவேற்றனர்; மகிழ்ந்தனர்.

கல்லூரியின் அதிபராக இவர் பதவியேற்ற காலம், யாழ்ப்பாணத்திலுள்ள ஒல்லாந்தர் கட்டிய கோட்டை இடிபாடு நிகழ்கிறது. அதன் அயலிலுள்ள எம் கல்லூரி அதிர்ந்து இடிகிறது. இதனை எதிர் கொள்ள முடியாது மாணவர்கள், ஆசிரியர்கள் பலர் இடம்பெயர்ந்து விலகுகின்றனர். பாடசாலைக் கருமங்கள் ஸ்தம்பிக்கின்றன;

**மன உறுதி மிகுந்தவர்**

இனி இவ்விடத்தில் பாடசாலைஇயங்கஇயலுமா என்ற ஏக்கமே அனைவரிடமும் ஏற்படுகிறது. இதனைக் கண்டு மனம் மிகக் கலங்கிய அதிபர் மனவுறுதி பெற்று தளரா முயற்சி செய்து மீண்டும் தேசிய பாடசாலைத் தரத்தினை கட்டியெழுப்பியுள்ளார்.

பெண்களுக்கான தலை சிறந்த கல்லூரியின் இடிந்த கட்டடங்கள் மத்தியில், கல்லூரியின் எல்லை, காட்ட முடியாத நிலையினைப் போக்க அதிபர் மேற்கொண்ட முயற்சிகள் பல. அதிபர் அலு[illegible] வடிவமைப்புப் படம் தொட[illegible]ப, வகுப்பறை [illegible] லுள்ள மலர்ச் செடிகள் வள[illegible]

அவரின் செயல் திறனுக்குச் சான்று. எம்மத்தியில் பல ஆண்டுகள் ஆசிரியராக இருந்த அனுபவத்துடன் மாணவர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் தம்மால் ஈர்த்து கருமமாற்றினார்

எங்கள் கல்லூரி வளர்ச்சிக்கு சிறந்த அடித்தளத்தை, புனரமைப்பை, அமைத்திருக்கும் அவரது பணியைத் தொடர்ந்து வளர்த்துச் செல்வது கல்லூரியின் தலையாய கடமை. அதிபருக்கு நாம் செய்யும் கைம்மாறும் அதுவே ஆகும்.

அதிபரின் பெருமைக்கு அவரின் செயல்கள் சான்று. அவர் காலத்தினால், கல்லூரிக்கு ஆற்றிய சேவையை தனித்துவமானதாகக் கொண்டு, கல்லூரி அவரை போற்றுவதோடு அன்புடன் பாராட்டி மனதார வாழ்த்துகிறது. ★

ஆசிரியர்கள்,
வேம்படி மகளிர் கல்லூரி.



செல்வி இரத்தினேஸ்வரி இராசரத்தினம்

## எங்கள் அதிபர்

யாழ். மாவட்டத்திலுள்ள மகளிர் தேசிய பாடசாலையான வேம்படி மகளிர் உயர்தரக் கல்லூரி நீண்ட கல்விப் பாரம்பரியத்தை உடையது

"பெண்களறிவை வளர்த்தால் வையம் பேதமையற்றிடும் — என்ற பாரதியார் வாக்கிற்கிணங்க பெண்களுக்கான கல்வியில் சிறப்பான பணியாற்றி ஒளிர்கிறது

காலங்கள் தோறும் கட்டி வளர்த்து கல்லூரி கண்ட கல்விப் பாரம்பரியச் சிறப்பில் கல்லூரியின் அதிபர்களின் பங்கு அளப்பரியது.

அதிபர் செல்வி ருவீடி (Twiddy (திருமதி பச்சலர்) தொடக்கம் செல்வி இ. இராசரத்தினம் வரை இவ்வரிசையில் வருகின்றனர். காலத்திற்கேற்ப இவர்கள் சிறப்பான கருமங்கள் ஆற்றி கல்லூரியைப் பெரிதும் வளம்படுத்தியவர்கள்

பல்வேறு நெருக்கடிகள் மத்தியிலும் வேம்படியின் கல்வி சிறக்க திருத்தமுறச் சேவை செய்த செல்வி இ. இராசரத்தினம் அவர்கள் எமது கல்லூரியில் ஆசிரியராய், பதிலதிபராய், அதிபராய் கால்நூற்றாண்டு கால சேவையைப் பூர்த்தி செய்து இன்று ஒய்வு பெறுகிறார்.

## மாணவர் இதயம்

நிமிர்ந்த நன்னடையும் நேர் கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், முதிர்ந்த
ஞானச் செருக்கும் கொண்ட செம்மை மாதர்
வரிசையிலே வேம்படி பெற்றிட்ட இரத்தினம்
★ செல்வி இராசரத்தினம் ★

அருளுடைமை, அறிவுடைமை, அன்புடைமை, ஆள்வினையுடைமை, அடக்கமுடைமை தனதாக்கி, செங்கோன்மை, சொல்வன்மை, அவை அஞ்சாமை, வினைத் தூய்மையில் திகழ்ந்திட்ட இவர் அவைபறிந்து, குறிப்பறிந்து, காலமறிந்து, இடன் அறிந்து, வலியறிந்து செயற்படும் திறன் மிக்க அதிபர்.

பட்டினத்தார் தாய்மீது கொண்டுள்ள அன்பைவிட மாணவர் நாம் இவர் மீது கொண்டுள்ளதோ பெரிது. விஞ்ஞானத் துறையை தன்துறையாகக் கொண்ட இவர் பல்துறை மாணவரை உருவாக்கித் தந்திட்டார்.

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

என்ற நிலையை எய்திட்ட இவர், எம் மாணவர் மனத்துள் நீங்காது உறைந்துள்ளார்.

இவர் வையத்துள் நீடூழி வாழ்ந்திடவே வாழ்த்துகிறோம் மாணவர் நாம்.

சுஜா சிவசுப்பிரமணியம்.
மாணவர் தலைவி,

## கைம்மாறொன்றுண்டோ...?

"கலை தேர்ந்த புலமைமிகு சூழல் புக்கு
கவினார்ந்த கல்லூரிக் கதிபரான
நிலையால் நீ உயர்ந்துள்ளாய் நின்னால் நின்றன்
நிறை உழைப்பால் கல்லூரி நிலைத்ததன்றோ"
புலமாண்ட பேரறிஞர் புகலக் கேட்டு
புளகாங்கிதமுறுவோம் புகழினோயே!
நிலமாண்ட மனிதர்களுள் நிமிர்ந்து நின்பின்
நிற்போர் பின்பற்றுமுயர் நெறியீர் வாழி!
கைம்மாறொன் றுண்டோ_நாம் அறியோம் நின்றன்
கலைச் சேவைக் கியல்பான கருணையுளிற் (கு)
அம்மாவென் றனைவோரும் போற்றுமிந்த
அன்பொன்றே கொண்டாய் நீ வாழி வாழி!
இம்மாநிலம் போற்றும் பெண்கள் வாழ்வு
இன் வாழ்வாய் அறிவொளியை ஏற்றி வைத்த
பெம்மாட்டி நின் வாழ்வு வாழி வாழி
பெருகுக வென் றே வாழ்த்தி அமைந்தோம் வாழி!

- ஆசிரியர்கள்.

விளம்பர இலக்கம் (சி-5401)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

தரமான, தெளிவான G.C.E.(O/L) English Literature கவிதைத் தொகுதிகளுக்குரிய குறிப்பு- வினா – விடை கவிதைகளுடன் கூடிய அச்சிட்ட நூல். விலை ரூபா 65. ஆக்கியோன்: த. ந. பஞ்சாட்சரம். புத்தகநிலையங்களிலும் New Science Hall கன்னாதிட்டியிலும் பெறலாம்.
(சி-5328)

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வியாபாரி மூலை கடற்கரை வீதியில் கொற்றங் கடவை தெணி வடக்கு கடல் தொழில் காணியும், தெற்கில் தென்னை மரக் காணியும் 4 (நாலு) பரப்பு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. சிவகுருவளவு வியாபாரிமூலை, பருத்தித்துறை. (26220)

## WANTED

பிரபல கல்வி நிறுவனத்தில் Nursing Tutorஆக கடமையாற்ற அனுபவமும் தகுதியும் உள்ள பெண் ஆசிரியை தேவை. இல. 909, மே பா உதயன். (சி-5321)

## புதிய வகுப்பு

Engineering Drawing 1ஆம் வருட பொறியியல் மாணவர்களுக்கான புதிய வகுப்புகள் ஆரம்பம். தொடர்பு: 3, வைமன் வீதி, நல்லூர். (26217)

## மாற்றம்

இதுவரை காலமாக 32, கஸ்தூரியார் வீதியில் இயங்கி வந்த புனிதா நகை மாளிகை 04-06-1993 முதல் 239, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள கட்டடத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது. (6245)

## இலவச திருமணசேவை

37 வயது, பூசம், செவ்வாயற்ற, பிரான்ஸில் தொழில் புரிபவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்து அழைக்கலாம். சகல மணமக்களுக்கும் தொடர்பு; ஞாயிறு காலையில். த. விமலா, நாச்சிமார் கோவிலடி, (26202)

## சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்களுக்கு உடன் விடை கிடைக்கும். ஜாதகக் குறிப்பு, கைரேகை, எண் சோதிடம், விவாகப் பொருத்தம் அனைத்துக்கும் தொடர்பு: டாக்டர் த. சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு. (26231)

## குளிர் சாதனப் பெட்டி

வடபிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பாவனைக்கென மண்எண்ணெய்யில் இயங்கும் இரண்டு குளிர் சாதனப் பெட்டிகள் அண்மையில் பருத்தித்துறை வந்த குமண கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

இவற்றில் ஒன்று பளை வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (த-162)

## SCIENCE COLLEGE

பெருமான் கோவிலடி
அருகாமை

**95 A/L**

PURE — APP.

திரு. குணசிங்கம்
B. Sc. (Hons)
ZOO.

திரு. இ. ஈஸ்வரதாசன்
B. Sc (Cey Dip - in - Ed

(அனுமதிகள் வழங்கப்படுகின்றன)
(சி-5329)

# சென்றலைட்ஸ் வி. க.

டொனால்ட் கணேஷகுமார் வெற்றிக்கேடயத்திற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தின் போது இடம்பெற்ற சீட்டிழுப்பில் பரிசுபெறும் அதிர்ஷ்ட சீட்டுக்களின் இலக்கங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| முதற் பரிசு: | 8392 | — ரூபா 3,000/- |
| இரண்டாவது பரிசு: | 2604 | — ரூபா 2,000/- |
| மூன்றாவது பரிசு: | 4876 | — ரூபா 1,000/- |

தலா ஐநூறு ரூபா பெறும் ஏழு ஆறுதல் பரிசு சீட்டுக்களின் விவரம்:

| | | | |
|---|---|---|---|
| 3541 | 1601 | 3757 | 7952 |
| 9845 | 1200 | 9863 | |

(கி-5299)

# வைத்திய சேவை

வாதரோகமா? நரம்புத் தளர்ச்சியா? உடல் மெலிவா? உடல் பருமனா; தலைமுடி உதிர்தலா? தலைமுடி நரைத்தலா? குழந்தைகளின் ரோகங்களா? மாதவிடாய்க் கோளாறுகளா? சிறந்த சிகிச்சையும், உரிய ஆலோசனையும் கிடைக்கும்.

தினமும் காலை 8-30 — 12-30,
பி. ப. 3·00 — 6·00

டாக்டர் த. சிவானந்தன்,
சிவா வைத்தியசாலை,
384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு.
(26230)

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
19-06-1928

மறைவு:
20-06-1988

திதி:
25-06-1993

## திருமதி சரஸ்வதி கணேசன்

ஆண்டு ஐந்து சென்றாலும் அன்னையே! எமது இதயத்தில் வீற்று இருக்கும் உங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளை.

சரஸ்வதி வாசம்,
சுதுமலை மேற்கு,
மானிப்பாய்.
[6260]

# ஈராண்டு நினைவலைகள்

அன்னையின் மடியில்:
13 — 04 — 1955



ஆண்டவன் அடியில்
17 — 06 — 1991

அமரர்
## கணபதிப்பிள்ளை மகாலிங்கம்
(உரிமையாளர்: லிங்கம் ஸ்ரோர் - கரடிப் போக்கு, கிளிநொச்சி)

திதி: 25 — 06 — 1993

ஈராண்டு சென்றதையா
என்மனமோ வேகுதையா
நாராக மாறிவிட்டேன்
நாயகனே நீயிலையே
ஆராரோ வருகின்றார்
ஆறுதலும் சொல்லுகின்றார்
ஐயா நீ இல்லாமல்
அலைந்து நிற்கின்றேன்.
குழந்தைகளைக் கண்டு விட்டால்
குதூகலித்து நிற்பீரே
குழந்தையுமைக் காணாது
குழறி இங்கே நிற்கிறது
அழுங் குழந்தை தனைப் பார்க்க
ஆருள்ளார் இங்கெனக்கு
ஐயாவே என் தலைவா
அலைந்து நிற்கின்றேன்.

மனைவி, பிள்ளைகள்.

33, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
(26224)

வட பிரதேச நல்லொழுக்க சம்மேளனம்
நடத்தும்

# சர்வதேச போதைப்பொருள் எதிர்ப்பு தினம் ஜூன்-26

இடம்: சம்மேளனப் பணிமனை தொல்புரம் சுழிபுரம்.

காலம்: 26 - 06 - 1993 மாலை 3 · 00 மணி

தலைவர்: திரு. இ. கெங்கராஜா அவர்கள்


பிரதம விருந்தினர்:
திரு. க. கணேசலிங்கம் அவர்கள்
(போறூட் சுழிபுரம்)

பல சிறப்பு விருந்தினர்களும் கலந்து கொண்டு உரையாற்றுவார்கள், தொடர்ந்து கவிதை, தாளலயம், வில்லிசை, நடனம், நாடகம் முதலிய கலை நிகழ்வுகளும் இடம்பெறும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம.

நெறியாளர் குழுவினர்,
வ. ந. சம்மேளனம்.
(6285)

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



## மாரிமுத்து ஆச்சாரி விஜயகுமார்
(விஜய்)
(யாழ். மத்தியகல்லூரி உயர்தர வகுப்பு மாணவனும், ஐயப்ப பக்தரும்)

மலர்வு:
06—02—1971

உதிர்வு:
09—07—1989

திதி: 25 - 06 - 1993

ஒழுக்கம், அடக்கம், திறமை
விழுப்பம் என்று வளர்ந்த விஜய்
வித்தகனாய் .. வீரனாய் .. ஒப்பற்றவிளக்காய்
எத்தனை கற்பனை எங்கள் நெஞ்சங்களில்
அத்தனையையும் கானலாக்கி ..
ஆறாத துயரொன்றை அளித்துவிட்டு
எங்கு சென்றாயடா?...
ஏங்கித் தவிக்குதடா எங்கள் நெஞ்சங்கள் ..
சிரித்த முகமும் திறந்த நெஞ்சமும்
நிறைந்த உன்னை
சிறையெடுத்துச் செல்ல...
நீசனுக்கு எப்படி நெஞ் நினைவு வந்தது?
பெற்றோரை... கூடப்பிறந்தோரை
உற்றவரை... ஊரிலுள்ள கற்றோரை
ஏங்கித்தவிக்க விட்டு — நீ
எங்கே சென்றாயடா?
கவிதையின் பிறப்பிடத்தை
கரண்ட் கம்பி வேட்டையாடியதே!
வித்திட்டாய் மாணவர்களை உருவாக்க
வித்துக்கள் கதறியழ
விதைத்தவன் நீ எங்கு சென்றாய்?
உதவிக்கரம் நீட்டும் உன்
உயர்ந்த உன் பண்புக்கு
என்றும் தலை வணங்கும்—இந்த
ஏழு உலகங்களும்
நீ ..சென்ற திசைபார்த்து
சிந்தும் விழியிரண்டும்...
விதியை வெல்ல முடியாதென்று ..
மதியைத் தேற்றுகிறோம்..
உன் ஆத்ம சாந்திக்காய்...
ஆண்டவனைத் தொழுகின்றோம்...

அன்னாரின் பிரிவால் வாடும்,
அன்பு அப்பா, அம்மா,
அக்காமார், அத்தான்மார்.
தங்கைகள்.

164, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(26235)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லூர் ... நூலகம்
மாநகர ... மன்றம்
யாழ்ப்பாணம்

## உதயன்

### மாணவர் அனுமதி முறை

பாடசாலைகளில் முதலாம் ஆண்டுக்கு மாணவர்களை அனுமதிக்கும் முறையில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு ஆலோசிக்கப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஒரு பாடசாலையின் சூழலில், அருகில் வசிக்கும் மாணவர்களுக்குக் கூடுதல் இடம் வழங்குவதே புதிய மாற்றத்தின் நோக்கம் எனக் கூறப்படுகிறது.

எந்தத் துறையிலும் கால ஓட்டத்திற்கு ஏற்ப மாற்றங்கள் தேவையே. ஆனால் அவை மக்கள் நலனுக்கும் சமுதாய வளர்ச்சிக்கும் உதவுவனவாக இருக்கவேண்டும். ஆனால் கல்வித் துறையில் அடிக்கடி மாற்றங்கள் செய்யப்படுவதால் அவை உரிய வளர்ச்சிக்கு உதவுவது குறைவு.

முதலாம்ஆண்டுக்கான அனுமதி முறையில் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றம் வரவேற்கப்படக்கூடிய ஒன்றாகும். பாடசாலைக்கு அருகில் வாழும் மாணவர்களுக்கு அனுமதியில் அதிக இடம் வழங்கும் முறையை ஆண்டு ஆறு, ஆண்டு ஒன்பது போன்ற வகுப்புகளுக்கும் நடைமுறைப் படுத்தப்படுவது நல்லது.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்னர், சமூகக்கல்வி வளர்ச்சியில் அக்கறை உள்ள பெரியோர்களும், கொடைவள்ளல்களும் அந்தந்தப் பகுதி மாணவர்களின் நலன் கருதியே கல்விக் கூடங்களை ஆரம்பித்தார்கள். ஆனால் இப்போது, புதிய அனுமதி முறைகள் நடைமுறைக்கு வந்த பின்னர், அனேக பாடசாலைகளுக்கு அடுத்த வேலியில் வாழும் மாணவன் வெகு தொலைவில் உள்ள பாடசாலைக்குச் சென்று பயில வேண்டிய பரிதாப நிலை நிலவுகிறது. குறிப்பாக பிரபல பாடசாலைகள் என வகுக்கப்பட்டுள்ள பாடசாலைகளைச் சூழ வசிக்கும் மாணவர்கள் புறக்கணிக்கப்படும் அவல நிலை தோன்றியுள்ளது.

பாடசாலைகளில் அவை அமைந்துள்ள பகுதி மாணவர்களை மட்டுமே அனுமதிக்க வேண்டும் என்பதல்ல. ஆனால் அவர்களுக்கு முன்னுரிமையும், அதிக வீத அனுமதி வசதியும் அளிக்கப்பட வேண்டும் என்பதைப் புறக்கணித்துவிட முடியாது.

அயலில் பாடசாலை இருக்க ஒரு மாணவன் தொலை தூரத்தில் உள்ள பாடசாலைக்குச் சென்று பயில்வது கல்வி நிலை முன்னேற்றத்துக்கு உதவாது. பாடசாலை சென்று வீடு திரும்புவதினால் உண்டாகும் உடல் ஆயாசம் அவனது கல்வியைப் பாதிக்கும். ஒரு பாடசாலையில் எல்லா மாணவர்களுமே தூரத்து மாணவர்களாக இருப்பின் பாடசாலையின் ஏனைய துறை வளர்ச்சியும் பெரிதும் பாதிப்புறும்.

கல்வித் தரம் கூடிய பாடசாலைகள் எனக் கருதப்படும் பிரபல பாடசாலைகளில் சேர்ந்து பயின்றால் மட்டுமே மாணவர்கள் சிறப்பாகச் சித்தி அடைய முடியும் என்ற தன்மையினாலும் அவற்றை அண்மித்து வாழும் மாணவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

இந்த நிலை மாறுவதற்கு, பாடசாலை நிர்வாக அமைப்பு முறைகளில் மாற்றம் தேவை. பிரபல பாடசாலைகளுக்கு வழங்கப்படும் கல்விப் போதனை மற்றும் தேவைகளுக்கு உரிய வளங்கள் ஏனைய பாடசாலைகளுக்கும் கிடைக்கவேண்டும். அவ்வாறு வளங்களைப் பரவலாக்குவதன் மூலமே பிரபல பாடசாலைகளில் உண்டாகும் இடநெருக்கடியைக் குறைத்து அயலில் வாழும் மாணவருக்கு அனுமதி வசதி அளிப்பதில் உதவ முடியும்.

எப்படியோ, பாடசாலைக்குச் சமீபமாக வாழும் மாணவருக்கு அனுமதியில் முன்னுரிமையும், அதிக இடஒதுக்கீடும் வழங்குவது உறுதிசெய்யப்பட வேண்டும். அதற்கான புதிய மாற்றம் ஆயிரக்கணக்கான மாணவரின் கல்வி முன்னேற்றத்துக்கு உதவும் என்பதில் ஐயமில்லை.

# யாழ்ப்பாணத்தில் பிறந்த குற்றத்துக்கு நியமனமில்லை

## மன்னார் வாசிகளின் பரிதாப நிலை

யாழ்ப்பாணம், ஜூன் 25

அண்மையில் நடைபெற்ற பொது எழுதுவினைஞர் பரீட்சைக்கு மன்னாரில் இருந்து தோற்றி சித்தி அடைந்தவர்களில் இருவர் யாழ்ப்பாணத்தில் பிறந்தவர்கள். இதன் காரணமாக இந்த இருவருக்கும் நியமனம் மறுக்கப்பட்டுள்ளதாம்.

ஏ. அன்ரன்ராஜ் செல்வி இதயராணி ஆகியோரே இந்த இருவரும் ஆவர் அன்ரன்ராஜ் நான்காவது இடத்திலும், இதயராணி 46ஆவது இடத்திலும் சித்திபெற்று நியமனம் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளனர்.

மன்னார் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இமானுவேல் சில்வா பொது நிர்வாக, மாகாண சபைகள் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் பெஸ்டஸ்பெரேராவுக்கும், மாகாணசபை அமைச்சுக்கும் இது தொடர்பாகக் கடிதம் எழுதி உள்ளார்.

இந்த இருவரும் மன்னாரைச் சேர்ந்தவர்கள் என்றும் —

மன்னாரில் போதிய வைத்திய வசதி இல்லாததால் இவர்களது பிரசவம் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியில் இடம்பெற்றது என்றும் —

1987 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மன்னாரில் வாக்காளர் இடாப்பு திருத்தப்படாததால் இவர்களது பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இடம் பெறவில்லை என்றும் — கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவற்றை ஆராய்ந்து மனிதாபிமான அடிப்படையில் நீதி வழங்கும்படியும் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது. (இ)

### கைக்கடிகாரங்கள் யாருடையவை

கொக்குவில் பகுதியில் தாம் கண்டெடுத்த பெண்கள் கைக்கடிகாரம் ஒன்றை திரு. எஸ். நிரஞ்சன், உதயன் பணிமனையில் ஒப்படைத்துள்ளார்.

உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைத் தெரிவித்து அலுவலக நேரத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளலாம்.

கொடிகாமப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட ஆண்கள் கைக்கடிகாரம் ஒன்றும் உதயன் பணிமனையில் உண்டு. அதனையும் உரியவர்கள் அத்தாட்சிகளைத் தெரிவித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். பல்கலைக்கழக சமூக விஞ்ஞான மன்றத்தின் ஆதரவில் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ். கே. விக்னேஸ்வரன்... நாதனின் ''பொது ஆட்சியியல்'' என்ற நூல் இன்று வெளியிட்டு வைக்கப்படும்.

பொருளியல்துறை மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணிக்கு பேராசியர் என். பாலகிருஷ்ணன் இதனை வெளியிட்டு வைப்பார். (ஒ)

## ஜே.ஆரின் நிலை குறித்து சிறிசேனகூரே பிரஸ்தாபம்

கொழும்பு, ஜூன் 25

தேவையற்ற விஷயங்களில் ஜே ஆர். ஜெயவர்த்தனா தலையிடுவார் என்று நான் நம்பவில்லை.

அமைச்சர் சிறிசேன கூரே முன்கண்டவாறு கூறினார்.

தற்போதைய ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு உதவியாக ஜெயவர்த்தனா செயல்படுவதாக வெளியான செய்திகள் பற்றி கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

''பின்னால் இருந்து ஜெயவர்த்தனா செயல்படுவதாகக் கூறுவது பற்றி எனக்கு நிச்சயமாகத் தெரியாது'' — என்றும் திரு. கூரே தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் அடுத்த ஜனாதிபதி வேட்பாளர் பற்றிய கேள்விக்கு—

''சரியான நேரத்தில் கட்சி தகுந்த வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்யும்'' — என்று திரு. கூரே பதிலளித்தார். (ஒ-எ)

### தர்மலிங்கத்தையும் ஆலாலசுந்தரத்தையும்

# இந்தியாவின் உத்தரவுப்படி ரெலோ அமைப்பே சுட்டது!

## புளொட் சித்தார்த்தன் பேட்டி

கொழும்பு, ஜூன் 25

மானிப்பாய் முன்னாள் எம். பி. வி. தர்மலிங்கத்தையும் கோப்பாய் முன்னாள் எம். பி. எம் ஆலாலசுந்தரத்தையும் இந்தியப் புலனாய்வுத் துறையினரின் உத்தரவின்படி ரெலோ அமைப்பினர் தான் கொன்றனர்.

முன்னாள் எம். பி. திரு. தர்மலிங்கத்தின் புதல்வரும் புளொட் அமைப்பின் தலைவருமான திரு. த. சித்தார்த்தன் முன்கண்ட தகவலை சண்டே ரைம்ஸுக்கு அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்திருக்கிறார்.

''02-09-85 இல் இக்கொலைகள் இடம்பெற்றன. முதலில் ஆலாலசுந்தரம் கடத்திச் செல்லப்பட்டார். அதன் பின்னர் கந்தரோடையில் தர்மலிங்கம் கூட்டிச் செல்லப்பட்டார். இருவரின் சடலங்களும் தாவடி மயானத்தில் காணப்பட்டன.

''எனது தந்தையின் கொலையில் விடுதலைப் புலிகள் சம்பந்தப்படவில்லை. அவரைக் கொலை செய்யும்படி பிரபாகரன் உத்தரவிடவில்லை. ரெலோ அமைப்பினரே இக்கொலைக்கு காரணமானவர்கள் எனது தந்தையை ரெலோ தலைவர் ஸ்ரீ சபாரத்தினம் இந்தியப் புலனாய்வுத் துறையினரின் உத்தரவுக்கு இணங்க கொன்றார்.

''தர்மலிங்கமும் ஆலாலசுந்தரமும் கொலையுண்ட சில மாதங்கள் கழித்து ரெலோவுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடந்த மோதலில் ஸ்ரீசபாரத்தினமும் அவரது ஆட்களும் கொல்லப்பட்டனர்.

இவ்விரு முன்னாள் எம்பிக்களையும் கொல்லும்படி இந்தியப் புலனாய்வுத் துறையினர் உத்தரவிட்டதாக ஸ்ரீசபாரத்தினம் சில புளொட் தரப்பினரிடம் தெரிவித்திருந்தார்.

கூட்டணியின் சக்தியைக் குறைக்குமுகமாக யாழ் குடாநாட்டில் உள்ள எல்லா கூட்டணி எம்பிக்களையும் கொல்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. எனினும் இரண்டு கூட்டணி எம்பிக்கள் இம்முயற்சியில் இருந்து தப்பிவிட்டனர்.

வடமராட்சிப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த ரெலோ பொறுப்பாளர் அந்த இரு எம்பிக்களையும் கொலை செய்ய மறுத்து விட்டதே

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரி இந்துவில் இன்று

யாழ்ப்பாணம், ஜூன், 25

சாவகச்சேரி இந்துக் கல்லூரி தேசிய பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டிருப்பதையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விழா இன்று அங்கு நடைபெறவுள்ளது.

இன்று காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ள விழாவில் யாழ் பிதிதேசக் கல்விப் பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும்—

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. தமிழ்ச்செல்வன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

இவ்விழாவில் மேற்படி பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட புலமைப்பரிசில் நிதி கையளிக்கப்படும். (ஒ 5)

### யாழ். - வன்னி தொடர்புசேவை

# செயலகங்கள் இடம் மாற்றம்

நெருக்கடி கால யாழ்— வன்னி தொடர்புச் சேவைச் செயலகங்கள் இடம்மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

தற்பொழுது யாழ். செயலகம் — ஆரியகுளம் சந்திக்கு அண்மையில் ஸ்ரான்லி (அருச்சுனா) வீதியிலும் —

கிளிநொச்சிச் செயலகம் கிளிநொச்சியில் பெற்றோலிய கூட்டுத்தாபனத்திற்கு அண்மையிலும் —

தகவல் கையேற்கும் கருமபீடம் ஓமந்தை சோதனை நிலையத்திலும் — இயங்கி வருகின்றன என்று போக்குவரத்து கண்காணிப்புப் பிரிவு அறிவித்துள்ளது. (ஒ)

## ஆலயங்களில்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள பல ஆலயங்களில் ஆனி உத்தரத்தை முன்னிட்டு நாளை விசேட அபிஷேக பூசைகளுடன் திருவிழாக்கள் நடைபெற உள்ளன

வருடாந்த மஹோற்சவங்கள் நடைபெற்று வரும் சிவனாலயங்களில் நாளை தீர்த்தோற்சவமும், நடேசர் அபிஷேகமும் இடம்பெறும்.

o o o

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி ஆலயத்தில் நாளை ஆனி உத்தரப் பூசையும் சங்காபிஷேகமும் நடைபெறும். (க-3)

o o o

நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் ஆலயத்தில் நாளை ஆனி உத்தர விசேட அபிஷேக ஆராதனை நடைபெறும். (க)

o o o

உரும்பிராய் வடக்கு பேச்சியம்மன் ஆலயத்தில் நாளை ஆனி உத்தர அபிசேகமும் நண்பகல் மகேசுவர பூசையும் நடைபெறும்.

o o o

மல்லாகம் கோட்டைக்காடு சானம்பை முருகமூர்த்தி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஆரம்பமாகி தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறும். (க-89)

o o o

பண்டாரவளவு ஆதிவைரவர் கோவிலில் யாழ் மாநகர சபை ஊழியர் வெள்ளி தோறும் நடத்தும் விசேஷ பூசை வழிபாட்டில் இன்று 'வாகீச கலாநிதி' க. நாகேஸ்வரன் 'யாரொடு நோவேன்' எனும் பொருளில் இசைச் சொற்பொழிவாற்றுவார். மாநகர ஆணையாளர் திரு. வே. பொ. பாலசிங்கம் நிகழ்வுக்குத் தலைமை வகிப்பார். (அ)

o o o

கொக்குவில் புனித சின்னப்பர் ஆலயத் திருவிழா நேற்று ஆரம்பமாகியது. இன்று பிற்பகல் 5 மணிக்கு ஆராதனையும் நாளை பிற்பகல் ... திருப்பலியும் ... ஆராதனையும் நடைபெறும். (க)

# பண்டிதமணி நினைவுரை

இலக்கிய கலாநிதி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவுப் பேருரை நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமையில் நடைபெறும்.

யாழ் பல்கலைக்கழக மெய்யியற்றுறைத் தலைவர் கலாநிதி சோ. கிருஷ்ணராஜா ''மெய்கண்டார்க்கு முற்பட்ட சைவ சித்தாந்தம்'' எனும் பொருள் பற்றி பேருரை நிகழ்த்துவார்.

இந்த நிகழ்ச்சி பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை நினைவுக் காப்பு நிதியத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் ஜூன் 27 ஆம் திகதி அறிஞர்களை அழைத்து நினைவுப் பேருரைகள் நிகழ்த்த ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன எனவும் பண்டிதமணி நினைவாக ஆண்டு தோறும் வெளிவரும் தமிழ்மொழி, இலக்கியம், சைவசித்தாந்தம் என்பன பற்றிய சிறந்த நூல் ஒன்றுக்கு பத்தாயிரம் ரூபா விருது வழங்கப்படவுள்ளது எனவும் நினைவுக் காப்பு நிதியம் அறிவித்துள்ளது. (க)

# விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூன் 25

யாழ். புனித மரியாள் விளையாட்டுக் கழகம் 9 பேர் கொண்ட அணிகளுக்கிடையில் நடத்திவரும் விலகல் முறை உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை புனித மரியாள் வித்தியாலய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் கழக அணிகள் வருமாறு:—

★ ஸ்ரீகுமரகுருபரன் வி. க. எதிர் அற்புதநர்த்தனன் வி. க.

★ யாழ். கிறீன்பீல்ட் வி. க. எதிர் கோப்பாய் கோல்ட் ஸ்ரார் வி. க.

o o o

இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு அருகாமையில்— ... புதிய விளையாட்டரங்கு திறக்கப்படுவதை ஒட்டி அந்த மைதானத்தில் கல்லூரி பழைய மாணவர் சங்கம் உதைபந்தாட்டப் போட்டித் தொடர் ஒன்றை ஒழுங்குபடுத்தியுள்ளது அந்தத் தொடரில் நாளை மாலை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:—

★ அளவெட்டி விநாயகர் வி. க. அணி எதிர் காங்கேசன்துறை யங்றோயல் வி. க. அணி

★ யாழ். பல்கலைக்கழக அணி எதிர் மயிலங்காடு ஞானசுடர் வி. க. அணி

நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெறும் ஆட்டங்கள் வருமாறு:—

★ சுன்னாகம் ஸ்கந்தா ஐ. பி. க. அணி எதிர் திருமலை நட்சத்திர வி. க. அணி

★ நாவாந்துறை சென்மேரிஸ் வி. க. அணி எதிர் ஊரெழு றோயல் வி. க. அணி (உ-89)

## ஐ தே.கட்சிக்குள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காட்டியது.

ஜனாதிபதி விஜேதுங்க பதவி ஏற்றவுடன் ஆடம்பரமான செலவுகளைக் குறைப்பது என்றும், 'கம்உதாவ' கொண்டாட்டங்களை நிறுத்துவது என்றும் அறிவித்திருந்தார்.

இம்முறையும் கூட மிஹிந்தலையில் மிகக் கோலாகலமாக அன்றி சுமாராகவே 'கம் உதாவ' நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது

வருடாவருடம் ஜூன் 23 'கம்உதாவ' கொண்டாட்டங்கள் இதுவரை நடைபெற்று வந்திருந்தன. ஜூன் 23 ஆம் திகதி பிரேமதாசவின் பிறந்த தினம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பிரேமாவின் பிறந்த தின கொண்டாட்டமே 'கம் உதாவ' என்று எதிர்க்கட்சிகள் இதுவரை காலமும் பலமாகக் கண்டனக் குரல் எழுப்பி வந்தன என்பதும் தெரிந்ததே. (ஒ-6)

## பொருளாதார..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இத்தடை நீக்கம் குறித்து கொழும்புப் பத்திரிகைகள் பல கேள்விக்குறி எழுப்பி இருப்பதாகவும் அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

யுத்திய இணை ஆசிரியர் சுணந்த தேசப்பிரிய நேற்று பி பி ஸி சிங்களச் சேவைக்குத் தெரிவிக்கையில் ''அரசின் தடை நீக்கத்தால் யுத்தம் மீண்டும் தீவிரமாகும் என்று சிலர் கருதுகிறார்கள்—குறிப்பாக கொழும்பில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் இத்தகைய ஓர் அச்சம் நிலவுகிறது என்றார்.


பெற்றோல், யூரியா, நிதக்கண்ணி வெடிக்குப் பயன்படுத்தக் கூடியவை. எனவே போருக்குத் தேவையான பொருள்களையே புலிகள் கோருகிறார்கள் என்ற அச்சம் நிலவுகிறது என்றும் யுத்திய இணை ஆசிரியர் தெரிவித்துள்ளார். (இ 6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அந்தியேட்டி அறிவித்தல்

தோற்றம்: 30 – 11 – 1905

மறைவு: 27 – 05 – 1993



சிவதொண்டன்
அமரர்

## கதிரிப்பிள்ளை சோமசுந்தரம்

(முன்னாள் பிரபல வர்த்தகர், சாண்டோ பயில்வான் சோமு)

27-05-1993 இல் காலமான எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி நாளை (26-06-93) சனிக்கிழமை காலை நடைபெற்று, ஊறணி தீர்த்த சமுத்திரத்தில் சங்கமிக்கப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள், அனுதாபிகள் இதை ஏற்றுக் கொள்ளவும்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரன்மார், பேர்த்திமார்,
பூட்டப்பிள்ளைகள்.

ஆலடி சந்தி,
வல்வெட்டித்துறை.

(6287)

# மரண அறிவித்தல்கள்

## ஏகாம்பரம் குருமூர்த்தி

(சைக்கிள் வேக்ஸ் ஷொப் உரிமையாளர்)

வேலணையைச் சேர்ந்தவரும் மட்டுவில் அம்மன் கோவிலடியை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஏகாம்பரம் குருமூர்த்தி காலமானார்;

அன்னார் சந்திரகலாவின் அன்புக் கணவரும் மாதங்கியின் அன்புத் தந்தையும் ஆவார். ஈமக்கிரியைகள் 25 - 06 - 1993 பிற்பகல் 2.00 மணிக்கு மட்டுவில் சவக்கடி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
கணேசநாதன்

மட்டுவில்.

(26246)

## திருமதி சிவபாக்கியம் இராசநாயகம் (நல்லபிள்ளை)

அச்சுவேலி, பத்தமேனியைப் பிறப்பிடமாகவும், கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இ. சிவபாக்கியம் 24-6-93 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் இராசநாயகத்தின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற பாக்கியலீலா மற்றும் பாக்கியநாதன், பாக்கியராணி, பாக்கியராஜா (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலரவீந்திரனின் அன்பு மாமியும், ரஜீவன், கனிக்சன், மதுசனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரது பூதவுடல் ஈமக்கிரியைகளுக்காக 26-6-93 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு கோண்டாவில் வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இருந்து கோண்டாவில் கொட்டைக்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவு செய்து ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
சி. இராசநாயகம்

கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு.
கோண்டாவில்.

## நல்லையா நிற்குணம்

இணுவில் மேற்கைச் சேர்ந்த நல்லையா நிற்குணம் (பொறியியலாளர்) 20. 6. 93 லண்டனில் காலமானார்.

இவர் நா. நல்லையா தம்பதியின் இரண்டாவது புதல்வரும், யசோதராவின் கணவரும், மதுரா, குணசீலன், பிரியா ஆகியோரின் தந்தையும், ஞானேஸ்வரன் தம்பதியின் மருமகனும், செல்வநாயகம், சிற்தரன், செல்வராணியின் மைத்துனரும், இலங்கைநாயகம், சபாபதிப்பிள்ளையின் பேறாமகனும், ஸ்ரீசிவதாஸ், முருகதாஸ், கங்காதரன், பத்மநாதன், வரதன், வசந்தினி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ந. முருகதாஸ்

ந. முருகதாஸ்,
இளந்தாரிகள் கோவிலடி,
இணுவில் கிழக்கு, இணுவில்.

(26242)

## புலிகள் வைத்த தரைக்,...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]
வரும் ரகத்தைச் சேர்ந்த ஒன்றாகும். குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தில் அத்தரைக்கண்ணி புதைக்கப்பட்டிருந்தது என்றும் குழுவின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புலிகள் புதைத்திருக்கலாம்

தரைக்கண்ணி வெடி விடுதலைப் புலிகள் ஊர்காவற்றுறையில் இருந்து வெளியேறிச் செல்லும் போது புதைக்கப்பட்டு பின்னர் இராணுவத்தினரால் கண்டுபிடிக்கப்படாத ஒன்றாக இருந்திருக்கலாம், அல்லது வாபஸ் பெற்ற பின்னர் விடுதலைப் புலிகள் ஊர்காவற்றுறைப் பிரதேசத்துக்குள் ஊடுருவி அதனைப் புதைத்துவிட்டுச் சென்றிருக்கலாம்.

இத்தரைக் கண்ணி விடுதலைப் புலிகளினால் புதைத்து வைக்கப்பட்ட ஒன்று என்பதை ஆணைக்குழு ஊர்ஜிதம் செய்கிறது. ஆயினும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த எந்த உறுப்பினர்கள் இதில் சம்பந்தப்பட்டிருந்தார்கள் என்பதைக் கூறமுடியாதுள்ளது.

இச்செயலுக்குப் பொறுப்பானவர்களுக்கு விடுதலைப் புலிகள் பரிசுகள் வழங்கியிருந்தது தொடர்பாக பத்திரிகைகளில் செய்திகள் வெளியானதையும் ஆணைக்குழு கவனத்துக்கு எடுத்துள்ளது. ஆனால் இது ஒரு பிரசாரத் தந்திரமாகவும் இருக்கக்கூடும்.

ஆகையால் இதில் சம்பந்தப்பட்டவர்களின் அடையாளத்தை ஏற்றுக்கொள்வது குறித்து ஆணைக்குழு எச்சரிக்கையுடன் நடந்துகொண்டுள்ளது.

### நிபுணர் கூறியது

பிரிட்டிஷ் வெடிகுண்டு நிபுணர் ஜே. ஆர். வயட், வாகனத்தின் பின்சக்கரம் தரைக்கண்ணி மீதாகச் சென்றபோது அது வெடித்ததாகக் குறிப்பிட்டுள்ளார். இது சிரேஷ்ட அரச உதவி பகுப்பாய்வாளரின் சாட்சியத்தை ஓரளவுக்கு ஆதரிக்கும் விதத்தில் அமைந்துள்ளது.

இந்தக் குண்டு வைக்கப்படுவதற்கு விடுதலைப்புலிகளே பொறுப்பு என்பது ஆணைக்குழுவின் உறுதியான கருத்தாகும்.

பத்திரிகைகளில் வெளியான அறிக்கைகளின்படி பார்த்தால் இத்தரைக் கண்ணிவைக்கப்படுவதற்கும் பொருத்தப்படுவதற்கும் விடுதலைப் புலிகளே பொறுப்பாக இருந்துள்ளார்கள்.

இவ்வாறு ஆணைக்குழு தனது அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

கொமன்வெல்த் விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது. ஆணைக்குழு உறுப்பினர் சேர் கெனத் அறிக்கையை ஜனாதிபதியிடம் நேரில் கையளித்தார். (ஒ எ)

## சைக்கிள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வும் யாழ் செயலகத்துக்குயாழ் அரச அதிபர் தகவல் அனுப்பியுள்ளார்.

இதேவேளை—

யாழ் மாவட்டத்தில் சில திருத்த வேலைகளை மேற்கொள்ள குறிக்கப்பட்ட அளவு சிமேந்துப் பைக்கட்டுக்களை அனுப்பவும் கூட்டுப்படைத் தலைமையகம் யாழ் அரச அதிபருக்கு அனுமதி வழங்கியுள்ளது. அத்துடன் 50 மெற்றிக் தொன் யூரியா உரத்தையும் இங்கு எடுத்துவர அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

## இந்தியாவின்.--

(5 ஆம்பக்கத் தொடர்ச்சி)
இதற்குக் காரணமாகும்.

அச்சமயம் இந்தியப் புலனாய்வுத் துறையினருடன் ரெலோ மிக நல்ல உறவுகளைக் கொண்டிருந்தது.

(இப்படி சித்தார்த்தன் தமது பேட்டியில் தெரிவித்துள்ளார். (இ-எ)

## திருமறை...

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]
கிழமை) நடைபெறும் "உரையும் கதையும்" விழாவுக்கு வித்துவான் க. சொக்கலிங்கம் தலைமை வகிப்பார்.

திருவாளர்கள் டொமினிக் ஜீவா, செங்கை ஆழியான், செம்பியன் செல்வன், பால நடராசன், திருமதி கோகிலா மகேந்திரன் ஆகியோர் இந்நிகழ்வில் பங்குபற்றுவர். "நீதி காத்தான்" என்ற சிந்துநடைக் கூத்தும் விழாவில் இடம்பெறும்.

மூன்றாம் நாள் (ஞாயிறு) நடைபெறும் "கவிதையும் கருத்தும்" நிகழ்வுக்கு பேராசிரியர் கா. சிவத்தம்பி தலைமை வகிப்பார்.

கவிஞர் சோ. பத்மநாதன், கவிஞர் காரை. செ. சுந்தரம்பிள்ளை, கவிஞர் வாகரைவாணன், கலாநிதி சோ. கிருஷ்ணராஜா, கலாநிதி அருட்திரு. ஏ. ஜே. வி. சந்திரகாந்தன் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்துகொள்வர்.

இவ்விழாவில் பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்கள் பாராட்டிக் கௌரவிக்கப்படுவார்.

பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகள் பாராட்டுரையும் மேதகு வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை ஆசியுரையும், திரு. எஸ். ஏ. அழகராசா புகழாரமும் நிகழ்த்துவர் "இலங்கையர் கோன் விலங்கு" நடன நாடகமும் விழாவில் இடம்பெறும். (அ-51-162)

அன்று சங்கம் ● இன்று மன்றம் ●

இன்பத் தமிழின்

# "இலக்கிய விழா"

## இன்று திருமறைக் கலா மன்ற அரங்கில்

காலம்: 25-06-93 நேரம்: மாலை 5. 30

● நாதஸ்வர இசை :- ஈழ நல்லூர் பிச்சையப்பா குழுவினர்

● வரவேற்பு நடனம் :- கவின் கலைகள் பயிலகம் (தி. ம. க. ம.)

● சிறப்புரைகள் :-

✶ பேராசிரியர்; அ. சண்முகதாஸ் "சங்கத்தமிழ் பெண்ணொருத்தி"

★ திரு. இ. ஜெயராஜ் (கம்பவாரிதி) "கூற்றையும் ஆடல் கொண்டோன்"

★ திரு. எஸ். சிவலிங்கராஜா M. A. "ஈழத்தில் கிறிஸ்தவ தமிழ் இலக்கியங்கள்"

✶ ஔவையார் — நாடகம் (நாடகப் பகுதி — தி. ம. க. ம.)

● வெளியீடு:-


## "கலைமுகம்" கலை இதழ்

பிரதி பெறுபவர்:- த. சிறில் (தலைவர்) (யா. ப. நோ. கூ. சங்கம்)

அனைவரும் வருக

(சி/5404)

# 31ஆம் நாள் நினைவஞ்சலி
## நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



மலர்வு: 25 — 04 — 1944 உதிர்வு: 27 — 05 — 1993

## அமரர் சண்முகம் விக்கிரமசிங்கம்

[வளர்மதி ஸ்ரோர்ஸ் • காங்கேசன்துறை]

எங்கள் அன்புத் தெய்வமே! எங்கள் வாழ்விற்கு வழிவகுத்த அன்பின் சிகரமே! பிறரை எதிர்பாராது எங்கள் வாழ்வை நாமே நடத்திச் செல்வதற்கு வழி வகுத்த குடும்பத்தின் குல விளக்கே! உங்களைப் பிரிந்த துயர் தீராது தவிக்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும், அநுதாபச் செய்திகளை அனுப்பியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

நாளை (26 - 06 - 93) சனிக்கிழமை நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

ஆடியபாதம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

(26240)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 192/8 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 25-06-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org